டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 12.9.2024 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 072 - Madurai | Online Edition

# குறைந்தபட்ச ஆதரவு விலையில் சோயாபீனை கொள்முதல் செய்ய ஒப்புதல்

## மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தகவல்

புது தில்லி, செப்.11

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலனுக்கு பிரதமர் நரேந்திர மோடி உயர் முன்னுரிமை அளித்து வருகிறார் என்று மத்திய வேளாண் விவசாயிகள் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு சேவை செய்வது என்பது நமக்கு கடவுளை வழிபடுவது போன்றதாகும். அண்மையில், மத்தியப் பிரதேச விவசாயிகள் சோயாபீன் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட குறைந்த விலைக்கு விற்கப்படுவதாக கவலை அடைந்துள்ளனர் என்று சிவராஜ் சிங் சவுகான் கூறினார். முன்னதாக மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் குறைந்தபட்ச ஆதரவு விலையில் சோயாபீனை வாங்க அனுமதித்தோம் என கூறினார்.

மத்திய அமைச்சர் சவுகான் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையில் சோயாபீன் வாங்குவது குறித்த செய்தியை அளித்தார். அதன் பிறகு, குறைந்தபட்ச ஆதரவு விலையில் சோயாபீனை வாங்க மத்திய பிரதேச அரசின் அமைச்சரவையில் ஒரு முன்மொழிவு வந்தது, மாலையில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் சோயாபீன் வாங்குவதற்கான மாநில அரசின் கடிதத்தை மத்திய அரசு பெற்றது.

குறைந்தபட்ச ஆதரவு விலையில் சோயாபீன் வாங்குவதற்கான மத்தியப் பிரதேச அரசின் முன்மொழிவை நாங்கள் பெற்றவுடன், நேற்று காலை அந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தோம் என்று சவுகான் கூறினார். மத்திய பிரதேச விவசாயிகள் கவலைப்பட வேண்டாம். சோயாபீன் குறைந்தபட்ச ஆதரவு விலையில் வாங்கப்படும். மேலும் விவசாயிக்கு அவரது கடின உழைப்புக்கான முழு விலையும் வழங்கப்படும்.

# மதுரை மாவட்டத்தில் ரூ.1,08,000/- மதிப்புள்ள விதைகளுக்கு விற்பனைத் தடை



மதுரை, செப்.11

மதுரை மாவட்டத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் விதை ஆய்வுப் பணிகளை சென்னை விதை ஆய்வு இணை இயக்குநர் ரவி திடீர் ஆய்வு செய்தார்.

தனியார் விதை சுத்திகரிப்பு நிலையம் தனியார், அரசு சார் மற்றும் அரசு விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டார். விதைகள் பெறப்பட்டவுடன் அவற்றின் முளைப்புத்திறனை உறுதிப்படுத்த, முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொண்டு முளைப்புத்திறன் பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார். விதை ஆய்வாளர் களால் மாதிரி எடுக்கப்பட்டு பகுப்பாய்வில் தேறாத விதைக் குவியல்களை விதையில்லா உபயோகத்திற்கு மட்டும் பயன் படுத்துமாறு பூச்சிநோய் தாக்காத வண்ணம் விதைகளை சேமிக்கவும் அறிவுறுத்தினார்.

மேலும், தனியார் விதை உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆய்வு செய்து உண்மை நிலை விதைக்கான விதை ஆதாரம் குறித்த பதிவேடுகளை உரிய முறைப்படி பராமரிக்க அறிவுறுத்தினார். கொள்முதல் செய்யப்படும் விதைக்குவியல்களுக்கான கொள்முதல் பட்டியல், பகுப்பாய்வு முடிவு அறிக்கை நகல், பதிவுச்சான்று போன்ற ஆவணங்கள் பெறப்பட்டு இருப்புப்பதிவேடு, விற்பனைப்பட்டியல் ஆகிய பதிவேடுகளை முறைப்படி பராமரிக்க வேண்டுமெனவும், விதைக்குவியல்களின் உண்மை இருப்பும், பதிவேட்டின்படி இருப்பும் சரியாக இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

விதை விற்பனை நிலையங்களில் விற்பனை ஆவணங்கள் முறையாக பராமரிக்கவும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விற்பனை பட்டியல்களில் குவியல் எண் மற்றும் காலாவதி நாள் குறிப்பிடப்பட்டு விவசாயியின் கையொப்பம் மற்றும் தொடர்பு எண் பெறப்பட வேண்டும் என வலியுறுத்தினார். விதை கொள்கலன் மற்றும் சான்று அட்டைகளில் குறிப்பிடப்பட்ட பயிர், ரகம், மற்றும் முகவரி ஆகியவை விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையினால் வழங்கப்படும் பதிவுச் சான்றில் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் ஒத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது ரூ.1,08,000/-(ரூபாய் ஒரு லட்சத்து எட்டாயிரம்) மதிப்புள்ள 270 கிலோ வீரிய மக்காச்சோள விதைகளுக்கு உரிய ஆவணங்கள் பராமரிக்கப்படாத காரணத்தினால் விற்பனைத் தடை விதிக்கப்பட்டது. ஆய்வின் போது மதுரை, விதை ஆய்வு துணை இயக்குநர், சு.வாசுகி, விதை ஆய்வாளர், சென்னை (தொழில் நுட்பம்) செல்வகுமார், விதை ஆய்வாளர், திருப்பரங்குன்றம் ஆர்.அகிலா மற்றும் விதை ஆய்வாளர், திருமங்கலம் மோ.கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

மேலும், விதை ஆய்வாளர்கள் விதைச்சான்றளிப்பு அலுவலர்கள், விதைப் பரிசோதனை அலுவலர்கள் ஆகியோர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதற்கான விதைச்சான்று அலுவலர்கள் மற்றும் விதைச்சான்று உதவி இயக்குநர் ஆகியோர் விதைப்பண்ணைகளை வயலாய்வு மேற்கொள்ளும் போது கூடுதல் கவனத்துடன் மேற்கொண்டு பிற ரக கலவன்கள் இந்திய விதைச்சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவை விட மீறாமல் பார்த்துக் கொள்ளும் படி அறிவுறுத்தப்பட்டது. விதைச் சான்று உதவி இயக்குநர் வல்லுநர் விதைப்பண்ணைகளை கண்காணிப்புக் குழுவுடன் கூடுதல் கவனம் செலுத்தி மேற்பார்வையிடுமாறு அறிவுரை வழங்கினார்.

விதை ஆய்வாளர்கள் தரமான விதைகளை விவசாயிகளுக்கு சென்றடையுமாறு விதை விற்பனை நிலையங்களை கூடுதல் கவனத்துடன் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# வளமும் பலமும் நிறைந்த வருங்காலத்திற்கு சிறுதானியங்கள்

புதுக்கோட்டை மாவட்டம், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் தமிழ்நாடு சிறுதானிய இயக்க திட்டத்தின் கீழ் புதிய மற்றும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள சிறுதானிய பதப்படுத்தும் மையங்களை விரிவுபடுத்துவதற்காக சிறுதானிய மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் 75 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், கிராமப் புற இளைஞர்கள், வேளாண் தொழில் முனை



வோர்கள், வேளாண் உட்கட்டமைப்பு நிதி பயனாளிகள் நிதி உதவி பெற தகுதியுடையவர் ஆவார்கள்.

இத்திட்டத்தின் மூலம் ஒரு பயனாளிக்கு பின்வரும் அனைத்து இயந்திரங்களும் ஒரு தொகுப்பாக வழங்கப்படும். சிறுதானியம் சுத்தம் செய்யும் இயந்திரம் (Pre-Cleaner) கல் மற்றும் தூசி நீக்கும் இயந்திரம் (De-Stoner), தோல் நீக்கும் இயந்திரம் (De-Huller), சிறு தானிய மாவு அரைக்கும் இயந்திரம் (Pulverizer), தானியத்தை நிறம் பார்த்து பிரிக்கும் இயந்திரம் (Multi Grain Colour sorter), தானியம் மெருகூட்டும் இயந்திரம் (Grain Polisher), சிப்பமிடும் இயந்திரம் (Packing Machine), எடையிடும் இயந்திரம் (Weighing Machine) மற்றும் முத்திரையிடும் இயந்திரம் (Sealing Machine) போன்ற முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் தேவைகளின் அடிப்படை யில் 75 சதவீத மானியத்தில் பெற்று பயனடையலாம். மேலும் திட்ட மதிப்பீட்டில் பயனாளியின் பங்களிப்பு குறைந்தபட்சம் 10 சதவீதத் தோடு, வேளாண் உட் கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் வட்டி மானியமும் பெறலாம். மாவட்ட அளவிலான குழுவின் பரிந்து ரையின் அடிப்படையில், இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மானியத் தொகையானது, மேற்கண்ட அனைத்து இயந்திரங்களும் நிறுவப் பட்ட பின் 60 சதவீதமும், சிறுதானிய மதிப்பு கூட்டும் பொருட்கள் உற்பத்தி திறன் அடிப்படையில் 40 சதவீதம் என இரண்டு தவணை களில் பயனாளியின் வங்கி கடன் கணக்கில் விடுவிக்கப்படும்.

ஊட்டச்சத்து மிகுந்த சோளம், கம்பு கேழ்வரகு போன்ற சிறு தானியங்கள், வரகு, பனிவரகு, குதிரைவாலி, சாமை, தினை போன்ற குறு தானியங்களின் சாகுபடி பரப்பு, உற்பத்தி, உற்பத்தி திறனை அதிகப்படுத்தவும், வளமும் பலமும் நிறைந்த வருங்கால தலைமுறை உருவாகவும் இத்திட்டம் வழி வகுக்கும். சோளம் புரதம் மற்றும் அமினோ அமிலம் நிறைந்தவை, கம்பு இரும்பு சத்து மற்றும் துத்தநாகம் நிறைந்தவை, கேழ்வரகு கால்சியம் மற்றும் பிற தாது உப்புக்கள் நிறைந்தவை, சாமை புரதம் மற்றும் ஸ்டார்ச் நிறைந்தவை, தினை அமினோ அமிலம் மற்றும் நார்ச்சத்து நிறைந்தவை, குதிரைவாலி இரும்பு சத்து மற்றும் பிற ஊட்டச் சத்துக்கள் நிறைந்தவை, வரகு ஊட்டச்சத்து மற்றும் நார்ச்சத்து நிறைந்தவை, பனிவரகு புரதம் மற்றும் அமினோ அமிலம் நிறைந் தவை எனவும், மருத்துவ குணம் அதிகம் நிறைந்ததோடு ஏற்றுமதி வாய்ப்புகளும் அதிகமாக உள்ளது என வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) தெரிவித்தார். வேளாண்மை அலு வலர்கள் சுபாஷினி, கந்தகிரிவாசன் மற்றும் நிரஞ்சன் ஆகியோர் உடனிருந்தனர். எனவே வேளாண் தொழில்முனைவோர்கள் அனைவரும் இத்திட்டத்தினை பயன்படுத்தி பயனடையுமாறு வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ரா.ஜெகதீஸ்வரி கேட்டுக் கொண்டார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 11.09.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 52 | 56 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 64 |
| 2 | வெண்டை | 20 | 24 | 58 | மேரக்காய் | 18 | 22 |
| 3 | தக்காளி (நாடு) | 18 | 22 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 21 | 60 | கேரட் | 60 | 64 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 45 | 50 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 55 | 60 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 22 | 28 | 66 | காளிபிளவர் | 50 | 58 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 60 | 134 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 40 | 45 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 38 | 42 | 71 | பென்னி பீன்ஸ் | 78 | 85 |
| 16 | பெ.வெங்காயம் | 48 | 52 | 72 | குடமிளகாய் | 48 | 52 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 26 | 73 | ஊட்டி அவரை | 110 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 56 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 30 | 34 | 71A | | | |
| 20 | தேங்காய் | 35 | 38 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 38 | 42 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | | | | 75 | எலுமிச்சை | 135 | 145 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு | 50 | 75 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 28 | 32 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 100 | 105 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 36 | 96 | நேந்திரன் | 40 | 45 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# 'நாட்டுக் கோழி வளர்ப்பு' – இலவசப் பயிற்சி

கரூர், செப்.11

கரூர் மாவட்டம், மண்மங்கலம் அருகில் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் 'நாட்டுக்கோழி வளர்ப்பு' பற்றிய ஒரு நாள் உள்வளாக பயிற்சி 13.9.24 (வெள்ளிக்கிழமை) அன்று இலவசமாக அளிக்கப்படவுள்ளது. விவசாயிகள்/ கோழிப் பண்ணை யாளர்கள்/நாட்டுக்கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ள அனைவரும் கலந்துகொண்டு நாட்டுக்கோழி வளர்ப்பு தொடர்பாக தங்களுக்கு உள்ள சந்தேகங்களுக்கு தெளிவு பெற்று பயன்பெறலாம்.

பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் 04324 294335 மற்றும் 73390 57073 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறு மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கேட்டுக்கொள்கிறார். மேலும், இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 13.9.24 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணிக்கு எமது பயிற்சி மைய வளாகத்திற்கு வந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

# மதுரை கிழக்கு மற்றும் மேற்கு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் பணமில்லா பரிவர்த்தனை




மதுரை, செப்.11

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு மற்றும் மதுரை மேற்கு வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் பணமில்லா பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் பெற வசதி செய்யப் பட்டுள்ளது. சம்பா பருவத்திற்கு தேவையான விதைகள், நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்கள் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப் பட்டு விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் இடுபொருட்கள் வாங்கவரும் விவசாயிகள் இடுபொருட்களுக்கான தொகையினை பணமாக செலுத்தாமல் டெபிட் / கிரெடிட் கார்டு / கூகுள் பே / போன் பே / பிஎச்ஐஎம் ஆகியவற்றை பயன்படுத்தி தொகையினை செலுத்தி வேளாண் இடுபொருட்களைப் பெற்று பயனடைய வேண்டி மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன் கேட்டுக்கொள்கிறார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உயிர்மச்சான்று நடைமுறைகள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, செப்.11

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 10.9.24 அன்று தனிச்சியம் செம்புகுடிபட்டியில் உயிர்மச் சான்றளிப்பு நடைமுறைகள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. மதுரை,வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) கு.சிவஅமுதன், மத்திய அரசின் வேளாண் திட்டங்களையும் விதைப்பண்ணை மூலம் இலாபம் ஈட்டும் வழிமுறைகளையும் எடுத்துரைத்தார். மதுரை, வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) த.மேரிஜரின் ஆக்னிட்டா விவசாயிகளுக்கு மாநில திட்டங்களின் மூலம் விவசாயிகள் உயிர்மச் சான்று நடைமுறைகளை பின்பற்றி எவ்வாறு உற்பத்தியை அதிகரிக்கலாம் என்று எடுத்துரைத்தனர்.

மதுரை, விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்று உதவி இயக்குநர் சி.சிங்காரலீனா விவசாயிகளுக்கு விதைப்பண்ணை அமைப்பது மற்றும் உயிர்மச் சான்று பெறும் வழிமுறை களையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி விளக்கிக் கூறினார். இரா.பாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர், அலங்காநல்லூர் (பொ) உயிர் உரங்கள், நெல்லுக்கு நுண்ணூட்டசத்து அளிப்பதன் அவசியம் பற்றி விளக்கினார். முனைவர் ஆனந்த், உயிர்மச் சான்றிற்கு பயன்படுத்தப்படும் இடுபொருட்கள் பற்றி எடுத்துரைத்தார். உதவி செயற் பொறியாளர் (வே.பொ), மதுரை வேளாண் பொறியியல் துறையில் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் மற்றும் வாடகைக்கு வழங்கப்படும் கருவிகளின் விவரம் பற்றி எடுத்துரைத்தார். திருமங்கலம் விதைச்சான்று அலுவலர் விதைச்சான்று நடைமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர், பால்பாண்டி, வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் பா.வேல்முருகன் மற்றும் உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# விவசாயிகளுக்கு பஞ்சகாவ்யா செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



விருதுநகர், செப்.11

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டாரம், கம்பனேரி புதுக்குடி கிராமப்புற வேளாண்மை பணி அனுபவ திட்டத்தில் இளங்கலை வேளாண் துறையில் இறுதி ஆண்டு பயிலும் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் சகலா தஸ்னீம், சௌமியா ஜோஸ், ஹரிணி, பிரகதி, ஷிவானி, நமீதா, பிரியங்கா, பாலம்மாள் ஆகியோர் கம்பனேரி புதுக்குடி கிராம விவசாயிகளுக்கு பஞ்சகாவ்யா செய்முறையையும், அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துறைத்தனர்.




இதில் விவசாயிகள் பெருமளவில் பஞ்சகாவ்யா பற்றின விவரங்களையும் அதை பயன்படுத்துவதால் பயிர்களுக்கு ஏற்படும் நன்மைகளை பற்றியும் அறிந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் மு. உதயகுமார், வேளாண் அலுவலர் மு. நஸ்ரின், உதவி வேளாண் அலுவலர் இரா. முருகேசன், ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம. ஜெயந்தி, குழு ஆலோசகர் முனைவர் அ. பாரதி ஆகியோரின் தலைமையில் இம்மாணவிகள் பஞ்சகாவ்யா செயல்முறை விளக்கம் அளித்தனர். இம்மாணவிகளின் செயலை அப்பகுதி விவசாயிகள் வெகுவாக பாராட்டினர்.

# விவசாயிகள் ஆலோசனைக்கூட்டம்

சேலம், செப்.11

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டுக்கான மாவட்ட விவசாயிகள் பயிற்சி, வெளி மாவட்டகண்டுணர்வு சுற்றுலா உழவர் திரள் பரவலாக்கம், பண்ணைப்பள்ளி, வேளாண் விஞ்ஞானி மற்றும் விரிவாக்க அலுவலர் கூட்டு வயலாய்வு இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட முதல் கட்ட நிதியை செலவினம் மேற்கொள்வதற்கு ஒப்புதல் வழங்கும் பொருட்டு வட்டார விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு கூட்டம் கடத்தூர் அக்ரஹாரம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தலைமை வகித்து இந்த ஆண்டு வேளாண்மைத்துறை சார்பாக செயல்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில அரசு மானிய திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்து கூறினார். வட்டார அட்மா குழு தலைவர் வெண்ணிலா சேகர் முன்னிலை வகித்து பேசும்போது அரசு செயல்படுத்தும் திட்டங்களை உரிய முறையில் அனைவரும் பயன்படுத்த கேட்டு கொண்டார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று பேசினார். தோட்டக்கலை உதவி இயக்குநர் ரா.அனுா, வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் பி.சங்கர் குமார், கால்நடை உதவி மருத்துவர் எஸ்.பிரதீபா, வனத்துறை வேளாண் ஆலுவலர் எஸ்.சந்திரசேகர் ஆகியோர் தமது துறையில் செயல்படுத்தப்படும் மானியத்திட்டங்கள் குறித்து எடுத்து கூறினர். மேலும் ஒரு கிராமம் ஒரு பயிர், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், பி.எம்.கிஸான் , உழவன் செயலி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் கூட்டதீர்மானங்கள் வாசித்து காட்டி ஒப்புதல் பெறப்பட்டது. உதவி தொழில்நுட்ப மேலாளர் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோர் பயிற்சி ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# மண்ணில் PH என்றால் என்ன?

மண்வளத்தின் தன்மை அறிய உதவும் முக்கியமான காரணி தான் இந்த (PH) பி.எச். மண்ணில் பி.எச் அமிலத்தன்மை மற்றும் காரத்தன்மை ஆகியவை மண்ணின் முக்கியமான இரசாயன குணங்களை நிர்ணயிக்கும். மேலும் இது மண்ணில் உள்ள ஊட்டச்சத்துகளை, பயிர்களின் வளர்ச்சிக்கு, கடத்தும் மிகவும் முக்கியமான காரணியாகும்.

மண்ணின் மாதிரி தண்ணீரில் கலந்து அதன் விளைவாக வரும் அக்வஸ் கரைசலை அளவிடுவதன் மூலமாக மண்ணின் PH-ஐ தீர்மானிக்க முடியும். பி.எச் என்பது மண்ணின் அமிலத்தன்மை / காரத்தன்மையை அளக்கும் ஒரு அளவு கோல். இந்த அளவுகோலில் பி.எச் மதிப்பு 0 முதல் 14 வரை இருக்கும். இதை வைத்து மண்ணின் அமிலம்/ காரத்தை தெரிந்து கொள்ள எளிய முறையாகும்.




**1) மண்ணின் அமிலத்தன்மை (ACIDITY) PH<7**

மண்ணின் PH மதிப்பு 7க்கும் குறைவாக இருக்கும் போது, அந்த மண் அமிலத்தன்மையாக இருக்கும். இது பயிர்களுக்கு தேவையான ஊட்டசத்துகளை கிடைக்க விடாது தடுக்கும். இதனால் பயிர் வளர்ச்சி மற்றும் மகசூல் பாதிக்கப்படும்.

**2) காரத்தன்மை ( BASICITY / ALKALINTY ) PH >7**

மண்ணின் ஆய்வின் மூலமாக பி.எச் மதிப்பு 7க்கு மேலாக இருந்தால் அந்த மண் காரத்தன்மை (காரமாக) இருக்கும். இது சில சத்துகளை மிகுதியாக கொண்டிருக்கும். ஆனால் பயிருக்கு சரிவர கிடைக்காது. ஆனால் சில சத்துகள் பற்றாக்குறையாக இருக்கும் இந்த மாதிரியான மண்களில்.

### 3) நடுநிலை தன்மை

இந்த மண்ணில் PH-7 என்றால் நடுநிலையானது. இந்த நிலையில் மட்டுமே பெரும்பாலான ஊட்டசத்துகள் பயிர்கள் எளிதாக இந்த மண்ணில் எடுத்துக் கொள்ளும். எனவே இந்த மாதிரியான மண்ணில் பயிர்களும் நன்றாக வளரும். இந்த ஊகூஷி என்பது மண்வள ஆய்வில் மண்ணின் தன்மை எளிதாக அறிந்து அதற்கேற்ப மண்ணின் தன்மைகேற்ப சாகுபடி பயிர்களை தேர்வு செய்து பயிரிட நமக்கு இந்த அளவீடு உதவியாக இருக்கும். மண்ணின் வளத்தை அறிய மண்மாதிரி எடுத்து அருகேயுள்ள மண்பரிசோதனை ஆய்வகத்தில் 30கட்டணத்தில் ஆய்வு செய்யலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# காளான் வளர்ப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் மாணவிகள்



திண்டுக்கல், செப்.11

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளநிலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் விஸ்வப்பிரியா, முத்துஸ்ரீஅபிராமி, விசாலினி, அப்ஸானா சஃப்ரீன் ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தில் தேனி அருகே சின்னமனூர் வட்டாரம் மார்க்கையன்கோட்டையில் உள்ள கிராம மக்களுக்கு காளான் வளர்ப்பு பற்றி செயல்விளக்கம் அளித்தனர்.

காளான் வளர்ப்பில் சுத்தம் முக்கியம். காளான் விதைகளை சோளம், கம்பு உள்ளிட்ட நவதானியங்களில் இருந்து உருவாக்க முடியும். காளான் விதைக்கு 90 நாட்களும் அதன் வளர்ச்சிக்கு 30 நாட்களும் என 120 நாட்கள் உற்பத்திக்கு தேவைப்படும். காளான் விதைகளை நாம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். காளான் வளர்ப்புக்கான இடத்திற்குள் பூச்சி மருந்து தெளிப்பது, எலி மருந்து வைப்பது போன்ற செயல்களை செய்யக்கூடாது.

வைக்கோலை ஒரு கொள்கலனில் சேர்த்து பார்மலின் 250 மிலி மற்றும் பேவிஸ்டின் 30-35 கிராம் சேர்த்து மூடி விட வேண்டும். வைக்கோலில் உள்ள உபரிநீரை நிழலில் உலர்த்தி அதன் ஈரப்பதம் 60% உள்ளவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

பாலித்தீன் பையில் வைக்கோல் ஒரு அடுக்கு என்றால் அடுத்த அடுக்காக காளான் விதைகளை தூவவும். இவ்வாறு 5-6 அடுக்குகள் ஒரு காளான் படுக்கையில் அடுக்கலாம். ஒரு கிலோ காளான் விதை 200 ரூபாய்க்கான கிடைக்கிறது. அதிலிருந்து 5 அடுக்கு கொண்ட ஆறு படுக்கைகளை உருவாக்கலாம்.

ஒரு படுக்கைக்கான செலவு 40 ரூபாய் மட்டுமே. ஆனால் நல்ல உற்பத்தியில் கிலோ 150-300 ரூபாய் கிடைக்கும். காளான் வளர்ப்பையும் தமிழக அரசு இனி வேளாண் தொழிலாக அறிவித்துள்ளது.

எனவே காளான் வளர்த்து பயன்பெற மார்க்கையன்கோட்டை கிராம மக்களுக்கு வேளாண் மாணவிகள் செயல்விளக்க மளித்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# பணமில்லா பரிவர்த்தனை மூலம் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் விநியோகம்

## வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, செப்.11

புதுக்கோட்டை வட்டாரத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் பணமில்லா பரிவர்த்தணையினை விவசாயிகள் பயன்படுத்திகொள்ள வேண்டும் என புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, தமிழ்நாடு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் சட்டமன்றத்தில் 2022-23ம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் புதிய மின்னணு தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பணமில்லா பரிவர்த்தணை முறை செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட்களை பெறும் போது தங்களது பங்களிப்பு தொகையை கிரெடிட் கார்டு,டெபிட் கார்டு, கூகுள்பே, போன் பே, பிஎச்ஐஎம் மற்றும் ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை (யு.பி.ஐ) ஆகியவற்றின் மூலம் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை வட்டாரத்தில் சம்பா பருவத்துக்கு தேவையான உயர் விளைச்சல் சன்ன ரக நெல் விதை ஆடுதுறை-51, 39, 54, நுண்ணுயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவைகள், பயறு சாகுபடி விவசாயிகளுக்கு துவரை போன்றவை தேவையானஅளவு இருப்பு வைக்கப்பட்டு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே புதுக்கோட்டை வட்டாரத்தில் உள்ள முதன்மை வேளாண் விரிவாக்க மையத்தில் பணமில்லா பரிவர்த்தணை மூலமாக மட்டுமே விவசாயிகள் தங்கள் பங்களிப்பு தொகை யினை செலுத்தி இடுபொருட்களை பெற்று கொள்ள முடியும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் இந்த பணமில்லா பரிவர்த்தணை நடைமுறைகளை பயன்படுத்தி பயனடையலாம் என அதில் தெரிவித்து உள்ளார்.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# விதையின் தரத்தை பாதுகாக்க விதையின் ஈரப்பத பரிசோதனை மற்றும் பிற இரக கலப்பு பரிசோதனை மேற்கொள்ளுங்கள்

விவசாயம் செய்வதற்கு மிக முக்கியமான இடு பொருட்களில் ஒன்று விதை. அவற்றுள் நல்ல தரமான விதைகளே நல்ல மகசூலுக்கு வித்தாகும். விதையின் தரமானது ஒரு விதையின் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரக கலப்பு ஆகியவற்றைக் குறிக்கும்.

விவசாயிகள் விதையின் தரத்தை பாதுகாக்க விதையின் ஈரப்பதம் மற்றும் பிற இரக கலவன் பரிசோதித்து பயிரிடுமாறு விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் சே. தில்லைக்கரசி விடுத்துள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

அறுவடை முடிந்தபின் விதைக்கு என்று சேமிக்கப்படும் நெல்லிற்கு 13% பயறுவகைகளுக்கு 9% வெண்டைக்கு 10% கத்தரி மிளகாய்க்கு 8% மற்ற காய்கறி விதைகளுக்கு 7% ஈரப்பதம் இருக்க வேண்டும். பருத்தி விதைக்கு 10% ஈரப்பதம் அளவும் இருக்க வேண்டும். விதைகளை தகுந்த ஈரப்பத அளவிற்கு உலர்த்தி அடுத்த பருவத்திற்கு சேமித்து வைக்கப் படும் போது அதன் வீரியம் மற்றும் முளைப்புத்திறன் குறையாமல் பாதுகாக்க முடியும்.

மேற்கூரிய அளவைவிட அதிக ஈரப்பதத்தில் சேமிப்பதன் மூலம் விதைகள் பூஞ்சான தாக்குதலுக்கு உட்பட்டு முளைப்பு திறனையும் வீரியத்தையும் இழந்து விதைக்கான தரத்தை இழக்கிறது. மேற்கூறிய அளவைவிட குறைந்த ஈரப்பதத்தில் சேமிக்கப்படும் விதைகள் முளைப்புத்திறனை இழந்து விதைக்கான தரத்தை இழக்கிறது. இதனை தவிர்க்க ஈரப்பத பரிசோதனை செய்துபின் விதைகளை சேமித்து வைத்தால் விதையின் தரத்தினை பாதுகாக்கலாம்.

பிற இரகம் கலந்த விதைகளை விதைப்பதால் நோய் பராமரிப்பு கலவன் எடுப்பதற்கு ஆகும் செலவினம் அதிகமாவதுடன் விதையின் தரம் குறைந்து மகசூலும் குறைகிறது.

நன்கு காயவைத்த விதைகளை புதிய கோணிகளில் மட்டுமே சேமித்துவைத்தல் வேண்டும். மூட்டைகளின் மேல் இரகத்தினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பல இரகங்கள் உள்ள நிலையில் மூட்டைகளை இரக வாரியாக தனி அறையில் குறிப்பு எழுதி வைத்தல் அவசியம்.

கடலூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகளில் பிற இரககலவன் விதைகள் கலந்து உள்ளனவா? என்பதை நுண்ணோக்கி மூலம்



கண்காணித்து இரகத்தின் குண நலன்களை கருத்தில் கொண்டு பிரித்து அறியப்படுகிறது.

நெற்பயிரில் பிற இரக விதைகள் ஆதார விதையெனில் 0.05 சதவிகிதமும், சான்று விதையெனில் ஒரு கிலோவிற்கு 0.2 சதவிகிதமும் இருக்கலாம். மக்காச்சோளம், தட்டைப்பயிறு ஆகிய பயிர்களில், பிற இரக விதைகள் ஆதார விதையெனில் ஒரு கிலோவிற்கு 5 விதையும், சான்று விதையெனில் ஒரு கிலோவிற்கு 10 விதையும் இருக்கலாம். சோளம், துவரை, உளுந்து மற்றும் எள் ஆகிய பயிர்களில், பிற இரக விதைகள் ஆதாரவிதையெனில் ஒரு கிலோவிற்கு 10 விதையும், சான்று விதையெனில் ஒரு கிலோவிற்கு 20 விதையும் இருக்கலாம்.

எனவே பிற இரக விதைப்பரிசோதனை மூலம் கலப்பில்லாத விதைகளைப் பயன்படுத்தி விவசாயிகள் உயர் மகசூல் அடைய வலியுறுத்தப்படுகிறது.




ஈரப்பத பரிசோதனை செய்வதற்கு ஒவ்வொரு விதைக் குவியலில் இருந்தும் 100 கி அளவு விதையினை தனியே எடுத்து பாலிதீன் உறையினுள் இட்டு காற்று புகாதவாறு கட்டி 97, பிருந்தாவன் நகர், பெண்ணைகார்டன், 50 அடிரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணாமலைசெட்டிசாவடி, கடலூர் – 607 006 என்ற முகவரியில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி ஈரப்பத அளவினை தெரிந்து கொண்டு பின் விதையினை சேமித்து வைத்து பயன்படுத்தலாம்.

ஒரு மாதிரிக்கான விதைப்பரிசோதனை கட்டணம் ரூ.80/- ஆகும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இப்கோ- முற்றிலும் நீரில் கரையும் உரங்கள்

**பொட்டாசியம் சல்பேட் - 0:0:50**

பொட்டாசியம் சல்பேட்டில்50% சாம்பல்சசத்தும் 17.5% கந்தகசத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து காய் வளர்ச்சி பருவத்தில்1-2 முறை தெளிக்கவும்.

**இப்கோ என்.பி.கே- 18:18:18 (NPK-18:18:18)**

இப்கோ என்.பி.கே- 18:18:18இல் 18% தழைச்சத்தும் 18% மணிச்சத்தும் 18% சாம்பல்சத்தும் 6.1% கந்தகசத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து பயிரின் வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு/ தூர் விடும் பருவம்) 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை தெளிக்கவும்.

**இப்கோ என்.பி.கே- 19:19:19 (NPK-19:19:19)**

இப்கோ என்.பி.கே- 19:19:19 இல்19% தழைச்சத்தும், 19% மணிச்சத்தும் 19% சாம்பல்சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து கிளைப்பு/ தூர் விடும் பருவம் முதல் பூக்கும் பருவம் வரை10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை தெளிக்கவும்.










தலைக் கவசம் உயிர்க் கவசம்

**நன்மைகள்**

- இப்கோஎன்.பி.கே–19:19:19 நாற்றங்கால் பருவம் முதலே பயிர்களுக்கு பயனபட்டுத்தலாம்.

- பயிர்களின் சீரான வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

- பயிர்களின்முளைப்பு திறன் மற்றும் வேரின் வளர்ச்சியை அதிகரிக்கிறது.

- பயிர்களின் உற்பத்தி மற்றும் தரத்தை அதிகரிக்கும்.

- பூக்கள் மற்றும் காய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

- பூச்சிகள் மற்றும் நோய்களுக்குஎதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

- ADVT.



# எலிகளைக் கட்டுப்படுத்த எளிய முறை

# வேளாண் கல்லூரி மாணவிகள் விளக்கம்



திண்டுக்கல், செப்.11

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளநிலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் விஸ்வப்பிரியா, அப்ஸானா சஃப்ரீன், முத்து ஸ்ரீஅபிராமி, விசாலினி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் தேனி மாவட்டம், சின்னமனூர் வட்டாரம் மார்க்கையன் கோட்டையில் உள்ள நெல் விவசாயியை சந்தித்த போது அங்கு




எலிகளின் தாக்கம் அதிகளவில் இருந்ததை கண்டறிந்தனர். அதனால் அவர்கள் விவசாயிகளுக்கு இயற்கை முறையில் எலிகளைக் கட்டுப்படுத்த எளிய முறையைக் கற்றுக் கொடுத்தனர்.

அதாவது சிறிதளவு கருவாட்டை எடுத்து அதைப் பொடியாக்கி அதே அளவு சிமெண்ட் எடுத்து சிரட்டையில் கலவை செய்து வயலில் மூலை வாரியாக வைக்க வேண்டும். வைத்த மூன்றாவது நாளுக்குள் எலி அதனை உன்னும் அப்போது அந்த சிமெண்ட் குடலில் ஒட்டி வயிற்றில் செப்டிக் ஆகி அது இறந்துவிடும். அது இறந்தபின் அடுத்த நாள் தவறாமல் அதை அப்புறப்படுத்த வேண்டும் என்று விவசாயிகளுக்கு எடுத்துரைத்ததோடு வயலில் செயல்விளக்கமும் செய்து காட்டினர்.

# விதைப் பருத்தியில் அறுவடை மற்றும் அறுவடை பின் நேர்த்தி!

விதைப் பருத்தியில் தக்கத் தருணத்திற்கு முன்பே அறுவடை செய்வதால் விதைகள் சுருங்கி சிறுத்துக் காணப்படும். இதனால் முளைப்புத் திறன் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. அதே சமயம் காலதாமதமாகப் பறித்தாலும், சுற்றுப்புற சூழலினால் முளைப்புத் திறன் பாதிக்கப்படும். பொதுவாக மகரந்தச் சேர்க்கை நடைபெற்று 45 முதல் 55 நாட்களில் விதைகள் முதிர்ச்சி அடைந்து அறுவடைக்குத் தயாராக இருக்கும். நன்கு வெடித்தக் காய்களை மட்டும் அறுவடை செய்ய வேண்டும்.

குளிர்கால பருத்தி பயிரில் முதல் ஐந்து பறிப்புகள் மற்றும் கோடைகால பருத்தி பயிரில் முதல் நான்கு பறிப்புகள் மட்டுமே விதைக்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும். விதைப் பருத்தி அறுவடைக்கு காலை வேளையே ஏற்றது. பறிக்கும் பொழுது விதைப் பஞ்சுகளை மட்டுமே பறிக்க வேண்டும். பறித்தப் பின் இரண்டு, மூன்று நாட்கள் நிழலில் உலர்த்த வேண்டும்.

பருத்தி காய்களில் இருந்து விதையைப் பிரித்தெடுக்கும் போது விதையின் ஈரப்பதம் 15 முதல் 18 சதவிகிதம் இருத்தல் வேண்டும். பஞ்சு நீக்கம் செய்ய இயந்திரங்களை உபயோகப்படுத்தும்போது உருளையின் வேகம், உருளைக்கும் பருத்திக்கட்டுக்கும் உள்ள இடைவெளி தக்க முறையில் சரி செய்து பயன்படுத்துவதன் மூலம் விதைகளில் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.தொடர்ந்து இயந்திரங்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்து சிறிது இடைவெளி விட்டு உபயோகிக்க வேண்டும். இவ்வாறு பிரித்தெடுத்த விதை களைப் பின் நிழலில் உலர்த்த வேண்டும். ஒரு முறை பஞ்சு நீக்கிய விதைகளை மறு முறை பஞ்சு நீக்கம் செய்ய உட்படுத்த கூடாது.

விதைச் சுத்திகரிப்பின் போது முற்றாத, உடைந்த பூச்சி நோய்த் தாக்குதல் மற்றும் தரம் குறைந்த விதைகளையும், விதையுடன் கலந்து இருக்கும் கல், மண், தூசி மற்றும் பிற விதைகளையும் நீக்கிவிட வேண்டும். விதை சுத்திகரிப்பின்போது பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரு இரகத்திற்கு பயன்படுத்தி விட்டு, வேறு இரகத்திற்கு பயன்படுத்தும் பொழுது நன்கு சுத்தம் செய்வது அவசியம். இல்லையெனில் விதைக் கலப்பு நேர்ந்து விதைகளின் ‘இனத்தூய்மை‘ பாதிக்கப்படும்.

விதை உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பில் செலுத்தும், கவனம் அவற்றின் சேமிப்பிலும் இருக்க வேண்டும்.

குறைந்த கால சேமிப்புக்கு விதைகளை 10 சதவிகிதம் ஈரப் பதத்திற்கு காயவைத்து, துணிப்பைகளிலோ அல்லது சாக்குப் பைகளிலோ சேமிக்க வேண்டும். நீண்ட கால சேமிப்பிற்கு விதை களின் ஈரப்பதத்தை, 6 சதவிகிதம் அளவிற்குக் குறைத்துக் காற்றுப் புகாத பாலித்தீன் பைகளில் சேமிக்கலாம். விதை நேர்த்திக்குத் திரம் பூஞ்சனகொல்லி மருந்தை ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் என்ற அளவில் கலக்க வேண்டும். விதை மூட்டைகளைத் தார்ப்பாய் அல்லது மரக்கட்டையின் மீது அடுக்கி வைக்கலாம்.

விதைச்சேமிப்புக் காலத்தில் விதைக் கிடங்கில் செல்பாஸ் அலுமினியம் நச்சு மாத்திரைகளை, ஒரு கன மீட்டருக்கு ஒரு மாத்திரை விகிதம் வைத்து கிடங்கை மூடி, பின் 3 நாட்கள் கழித்து நச்சுக்காற்றை வெளியேற்றி விடுவதன் மூலம் சேமிப்பின் போது விதைகளைப் பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாக்கலாம் என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மைஉதவி இயக்குநர் செல்வம் தெரிவித்தார்.

# வேளாண் திட்டங்கள் மற்றும் மானியம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு



விருதுநகர், செப்.11

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண் துறை மாணவர்கள் ஆகாஷ், எழில் ஆகாஷ்,ஆனந்த முருகன், ஸ்ரீதர் நவீன், முகைதீன் பைசல், பாலசுப்ரமணியன், ஆகாஷ் குபேந்திரன் மற்றும் சந்தோஷ் சிவன் வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிராம தங்கல் திட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தங்கி விவசாயிகளை நேரில் சந்தித்து ஆலோசனைகளையும் செயல்முறை விளக்கமும் விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இம்மாணவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி வேளாண்மை அலுவலர் குருலட்சுமி, பாட ஆசிரியர் டாக்டர் ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் சதீஷ் குமார் அறிவுரையின்படி, ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் உள்ள அச்சம் தவிழ்த்தான் கிராமத்தில் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசின் கீழ் வேளாண் துறை மூலம் செயல்படும் விவசாய திட்டங்கள் மற்றும் மானியம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் குறிப்பாக பயிர் காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் கூட்டுப் பண்ணையத் திட்டம் குறித்து விரிவாக விளக்கினர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.